இப்பொழுது குறைந்த காலத்திற்குள்ளே இதை நிறைவேற்ற முயற்சிக்கிறோம் என்று, இப்படிப்பட்ட நல்லெண்ணம் காண்பிப்பதை தவறுபோல காண்பிப்பது தல்லது அல்ல என்பதை அவர்கள் உணர்வார்கள் என்று நம்புகிறேன்.

எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்துக்களைப்பற்றி பேசிக் கொள்ளலாம் என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் புனராலோசனை என்று, காம்ப்ரஹென்சிவ் லெஜிஸ்லேஷன் என்று சொன்னதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. இந்தச் சட்டத்திலே மாறுதல் ஏற்படவேண்டுமென்ற எண்ணத்தைக் கூறுவதே தவிர, காம்ப்ரஹென்சிவ் லெஜிஸ்லேஷன் என்றவுடன் சட்டத்தையே மாற்றப்போகிறோம் என்ற கருத்தை எடுத்துக்கொள்ளக்கூடாது. சட்டத்தின் தன்மையிலே எந்தவிதமான மாற்றமும் கிடையாது. இதிலேயுள்ள மாறுதல்களைத்தான் கூறுகிறோமே தவிர, காம்ப்ரஹென்சிவ் லெஜிஸ்லேஷன் என்பது இந்த மன்றத்திலே பேசப்படும் ஒரு வார்த்தை. எல்லாமே மாற்றப்போகிறோம் என்ற எண்ணத்திற்கு ஒரு தெளிவு ஏற்படுத்த வேண்டுமென்ற முறையிலே கூறுகிறேன், தன்மையிலே எந்தவிதமான மாற்றமும் கிடையாது, ஆங்காங்குள்ள சிக்கல்களை நீக்கு வதற்கான மாற்றம் என்பதை வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"தமிழ்நாடு 1971-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 6/1971) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, மசோதா, சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(4) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(எ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

(6) அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 1/1971)

* **மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, "தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு மசோதாவை* (சட்டப் பேரவை மசோதா எண் 1/1971) ஆய்வு செய்வதற்காக முப்பது உறுப்பினர்கள் அடங்கிய (20 சட்டப் பேரவை உறுப்பினர்களும், 10 சட்ட மேலவை உறுப்பினர்களும்) கூட்டு ஆய்வுக் குழு ஒன்றை அமைக்க சட்ட மேலவையின் இசைவைப் பெறுவதுடன், இக் கூட்டு ஆய்வுக் குழுவில் கீழ்க்கண்ட பேரவை உறுப்பினர்கள் (உறுப்பினர் பட்டியல் பின்னர் வழங்கப்படும்) பணியாற்ற தெரிந்தெடுக்கப்படுகிறார்கள்" என்று முன்மொழிகிறேன்.

---

* 1971 மார்ச் 26-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.